**ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம்: 05/2015 (i)**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2015
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
04-08-2015.

முப்படைத் தளபதிகள்,
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்,
அனைத்துப் பிரதேச செயலாளர்களிற்கு,

**பொ.நி.சு. 06/2006 இன் படி ஓய்வூதியங்களைச் சீரமைத்தல் (2015)**
**(ஆயுதப்படைச் சேவைகள்)**

மேற்குறித்த விடயம் தொடர்பிலான 03-08-2015 ஆந் திகதி மற்றும் இலக்கம் 16/2015 (i) கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபம் மற்றும் 06-07-2015 ஆந் திகதி மற்றும் இலக்கம் 05/2015 கொண்ட ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருபத்திற்குச் சமாந்திரமாய், இச்சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்கள் மீது தங்களது கவனத்தினைத் திருப்புகின்றேன்.

02. ஓய்வு பெற்றுள்ள ஆயுதப்படைச் சேவை ஆண், பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களது ஓய்வூதியச் சீராக்கங்கள் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதன் படி ஓய்வூதியச் சீராக்கங்களைத் துரிதமாக மேற்கொள்ளும் படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 01. | சனாதிபதி செயலாளர் | - தயவுமிகு தகவலுக்காக |
| 02. | பிரதமரின் செயலாளர் | - தயவுமிகு தகவலுக்காக |
| 03. | செயலாளர் - அரச நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சு. | - தயவுமிகு தகவலுக்காக |
| 04. | செயலாளர் - உள்நாட்டலுவல்கள் அமைச்சு | - தயவுமிகு தகவலுக்காக |
| 05. | செயலாளர் - நிதி அமைச்சு | - தயவுமிகு தகவலுக்காக |
| 06. | கணக்காய்வாளர் நாயகம். | - தகுந்த நடவடிக்கைகளின் பொருட்டு |

## பொ.நி.சு. 06/2006 இன் படி ஓய்வூதியங்களைச் சீராக்குதல் (2015) அறிவுறுத்தற் கோவை (ஆயுதப்படைகள்)

ஆயுதப்படைகளது வேதனங்களை மீளாய்வு செய்த வண்ணம் வெளியிடப்பட்ட 25-04-2006 ஆந் திகதி கொண்ட இலக்கம் 06/2006 மற்றும் 28-07-2007 ஆந் திகதி கொண்ட இலக்கம் 06/2006 (IV) எனும் பொது நிர்வாகச் சுற்றுநிருபங்கள் அமுல்படுத்தப்பட முன்னர் ஓய்வு பெற்றுள்ள ஆயுதப்படைச் சேவை ஆண், பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களது ஓய்வூதியங்களை அச் சுற்றுநிருபங்களின் அடிப்படையில் சீரமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதன் படி 03-08-2015 ஆந் திகதி மற்றும் இலக்கம் 16/2015 (i) கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்திற்குச் சமாந்திரமாய் இவ் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன.

01. இவ் ஓய்வூதியச் சீரமைப்புக்கள் 01-07-2015 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகின்றன.

02. 01-01-2006 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்று 01-07-2015 ஆந் திகதியில் ஓய்வூதியத்தினைப் பெற்ற வண்ணமுள்ள ஆயுதப்படைச் சேவை ஆண், பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கு இம் மீளாய்வுகள் உரித்தாகும்.

03. அவ்வாறே 01-01-2006 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் ஈடுபட்டிருக்கையில் உயிரிழந்த மற்றும் 01-01-2006 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்று அதன் பின்னர் உயிரிழந்துள்ளவர்களுக்காக வேண்டி 01-07-2015 ஆந் திகதியில் ஓய்வூதியம் பெறுகின்ற ஆயுதப் படை விதவைகள்/தபுதாரர், அனாதைகள்/ வலது குறைந்த அனாதைகளுக்கு இவ் ஓய்வூதியச் சீராக்கங்கள் உரித்தாகும்.

04. அவ்வாறே 01-01-2006 ஆந் திகதி முதல் 30-06-2011 ஆந் திகதி வரையில் ஓய்வு பெற்றுள்ள அல்லது சேவையில் ஈடுபட்டிருக்கையில் உயிரிழந்துள்ள ஆயுதப் படைகளின் ஆண் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ் நிலை உத்தியோகத்தர்களுக்காக வேண்டி வழங்கப்படும் சேவை ஓய்வூதியம், ஆயுதப் படை விதவைகள்/தபுதாரர், அனாதைகள்/ வலது குறைந்த அனாதைகளுக்கு இவ் ஓய்வூதியச் சீராக்கங்கள் உரித்தாகும்.

05. ஓய்வு பெற்ற திகதியில்/ சேவையில் ஈடுபட்டிருக்கையில் உயிரிழந்த திகதியில் பெற்ற வண்ணமிருந்த அடிப்படைச் சம்பளப் படிநிலையினைப் பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 06/2006 மற்றும் 06/2006 (iv) இன் படி நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பளத் திட்டங்களின் உத்தேச சம்பளப் படிநிலையில் அமர்த்தி அத் திகதியில் அனுமதிக்கப்பட்டுள்ள படிகளைக் கூட்டுச் சேர்த்து ஆயுதப்படைச் சேவைகளது ஓய்வூதியத்தினைக் கணிப்பிடும் சதவீத அட்டவணையினை உபயோகிப்பதன் மூலம் ஓய்வூதியத்தினைக் கணிப்பிடுதல் வேண்டும்.

06. அவ்வாறு கணிப்பிட்ட குறைக்கப்பட்ட/குறைக்கப்படாத ஓய்வூதியம் புதிய சீரமைக்கப்பட்ட ஓய்வூதியமாகும். பிற எவ்விதமானதோர் ஓய்வூதிய உரித்துடைய மாற்றியமைப்பும் கிடைக்கப் பெற மாட்டாது.

07. மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியத்துடன் வாழ்க்கைப்படி ரூ. 3,525.00 மற்றும் 2015 வரவு செலவுத் திட்ட இடைக் காலக் கொடுப்பனவான ரூ. 3,500.00 கிடைக்கப் பெறுவதுடன், வாழ்க்கைப் படிக் கொடுப்பனவினைச் சீராக்கி வழங்குதல் வேண்டும்.

08. ஓய்வூதியச் சுற்றுநிருபம் 6/2010 இன் அறிவுறுத்தல்களின் படி ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு குறித்த அச் சதவீதத்தினையே இவ் ஓய்வூதியத்தினைச் சீராக்குவதற்காக உபயோகித்தல் வேண்டும்.

09. தங்கிவாழ்வோர் கொடுப்பனவு, நலிவுநிலை ஓய்வூதியங்களுக்கு இவ் ஓய்வூதியச் சீராக்கங்கள் ஏற்புடையதாக மாட்டாது.

10. எனினும் சேவை ஓய்வூதியத்துடன் நலிவுநிலை ஓய்வூதியமும் வழங்கப்படின் சீரமைக்கப்பட்ட ஓய்வூதியத்திற்கு நலிவுநிலை ஓய்வூதியத்தினை, ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம் 9/2008, 9/2008(I) என்பவற்றின் படி கணிப்பிட்டு ஒருங்கிணைத்தல் வேண்டும்.

11. வயது 55 வருடங்கள் பூரணமானதன் பின்னர் இடைநிறுத்தப்பட்ட இறுதிச் சம்பளம் மற்றும் அத்திகதியிலான சேவைக்காலத்தின் படி ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படுவதனால் வயது 55 வருடங்கள் பூர்த்தியடையும் வரை சம்பளம் வழங்கப்படின் சேவை ஓய்வூதியம்/விதவைகள்/தபுதாரர் ஓய்வூதியத்திற்கு இச் சீரமைப்புக்களை மேற்கொள்ளுதல் கூடாது. எனினும் அவ்வாறு வயது 55 வருடங்கள் பூரணமடைவதன் கீழ் சம்பளத்தினை நிறுத்தி 06/2006 அல்லது 06/2006 (iv) சம்பள மீள்கட்டமைப்புக்கள் செயற்படுத்தப்பட முன்னர் காணப்பட்ட சம்பளத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்பட்டிருப்பின் இச் சீரமைப்புக்கள் உரித்துடையனவாகும்.

12. மீள விவாகமாகியுள்ள விதவை/தபுதாரர்களுக்கு சீரமைக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் படிகளின் 50% இனை வழங்குதல் வேண்டும்.

13. மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியத்தினை 01-07-2015 ஆந் திகதி முதல் வழங்குதல் வேண்டும். அதன் அடிப்படையில் நிலுவைத் தொகைகளை வழங்க வேண்டியதுடன், மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள படிகளை நிலுவை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுதல் வேண்டும்.

14. இவ் ஓய்வூதியத்தினைச் சீரமைக்கும் போது அடிப்படைச் சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரித்துடைய படிகளைத் தீர்மானிக்கையில் இலக்கம் 16/2015 (i) மற்றும் 03-08-2015 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் இலக்கம் 03 இன் கீழ் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

15. பிரித்து வழங்கப்படும் ஓய்வூதியங்களுக்கு 01-07-2015 ஆந் திகதி முதல் புதிய மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டியதுடன், அதனை ஒரே கோவையின் மூலம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

16. இச் சீரமைப்புக்களுடன் ஏற்புடைய சம்பள மாற்ற அட்டவணைகளின் பொருட்டு 03-08-2015 ஆந் திகதி மற்றும் இலக்கம் 16/2015 (i) கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இனை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**02. ஓய்வூதியத்தினைச் சீரமைப்பது தொடர்பில் ஆயுதப்படைகளது கடப்பாடுகள்.**

01. ஆயுதப்படைச் சேவை ஆண் பெண். உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களது சுயவிபரக் கோவையினைப் பயன்படுத்திய வண்ணம் இம் மீளாய்வுகளைக் கணிப்பிடுதல்.

02. அக் கணிப்பீட்டு ஆவணங்களை ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்கும் பொருட்டுக் குறித்த பிரதேச செயலகத்திடம் அனுப்புதல்.

03. சேவை ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளும் ஆயுதப்படைச் சேவை ஆண் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களது கணிப்பீட்டு விபரங்களை ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் படி Excel பரப்பொன்றில் தயாரித்துப் பெயர் கொண்ட பதவி முத்திரையினை இட்டு உறுதிப்படுத்திய அச்சுப் பிரதி சகிதம் மென் பிரதியினை ஓய்வூதியத் திணைக்களத்திடம் பெற்றுக் கொடுத்தல்.

04. Excel பரப்பொன்றில் ஓய்வூதிய இலக்கம், பிரதேச செயலகக் குறியீடு, வகை இலக்கம் என்பனவற்றினை முறையாக இனங்கண்டதன் பின்னர் உள்ளடக்குதல்.

**03. பிரதேச செயலகங்களைச் சார்ந்த கடப்பாடுகள்.**

01. ஆயுதப் படைகளிடமிருந்து ஓய்வூதியச் சீரமைப்பிற்குரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

02. அவ் ஆவணங்களை குறித்த ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்குதல் மற்றும் ஓய்வூதியர்களிடமிருந்து PDC/5(2015)/1 மாதிரியினைப் பெற்றுக் கொள்ளுதல்.

03. சேவை ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளும் ஆயுதப்படைச் சேவை ஆண் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களது ஓய்வூதியத்தினை, ஓய்வூதியத் திணைக்களத்தினால் Excel பரப்பின் மூலம் பெற்றுக் கொண்ட விபரங்களின் படி மத்திப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியினுள் தகவல்களை உள்ளடக்கி கொடுப்பனவகளை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதனால் www.pensions.gov.lk மூலம் கொடுப்பனவுகள் சரியானவை என்பதனை உறுதிப்படுத்திக் கோவையினுள் உள்ளடக்குதல்.

04. உயிரிழந்துள்ள ஆயுதப்படைச் சேவை ஆண் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்காக வேண்டி வழங்கப்படும் விதவைகள்/ தபுதாரர்/ அனாதைகள்/ வலது குறைந்த அனாதைகளது இவ் ஓய்வூதியச் சீராக்கங்களுடன் ஏற்புடைய குறித்த ஆயுதப்படையினால் அனுப்பப்படும் விபரங்களின் படி PDC/5(2015)/2 மாதிரியினைப் பூரணப்படுத்தி மத்திப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியினுள் உள்ளடக்குதல் மற்றும் 05/2015 ஓய்வூதியச் சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் இலக்கம் 03 இன் கீழ் பெற்றுத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**(ஒப்பம்)**
**எஸ். எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**